# மெட்ரோ ரயிலில் இன்று முதல் கட்டணம்

சென்னை. பிப். 14: சென்னையில் 45 கி.மீட்டர் தூரத்திற்கு நடைபெற்று வந்த முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிவடைந்து கடந்த 10ம் தேதி முழுமையான சேவை தொடங்கப்பட்டது. இதையடுத்து அன்றைய தினம் மாலை, 6 மணி முதல் நேற்று வரை, 4 நாட்கள் அனைத்து வழித்தடங்களிலும் மெட்ரோ ரயில் சேவை இலவசமாக வழங்கப்பட்டது. அந்த நாட்களில் சுமார், 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர். இதையடுத்து நேற்றைய தினமும் இலவச மெட்ரோ ரயில் சேவை வழங்கப்பட்டது. காலை, 6 மணி முதலே அனைத்து வழித்தடங்களிலும் கூட்டம் அலைமோதியது. அந்தசேவையை இரவு, 10 மணி வரை பயன்படுத்தினர். நேற்றைய தினம் மட்டும், 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தியதாக தெரிகிறது.

பச்சை மற்றும் நீளம் வழித்தடங்களில் நடைபெற்று வந்த சோதனை ஓட்டம் நேற்றுடன் முடிந்தது. இதையடுத்து இன்று முதல் மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய பயணிகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.